COUNT US IN 2020

There's Power In Being Counted

ASIAN AMERICANS ADVANCING JUSTICE

COUNTUSIN2020.ORG

# 2020 மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு நான் எவ்வாறு பதிலளிக்க வேண்டும் மற்றும் அது என்னிடம் என்ன கேட்கிறது?

2020 மக்கள் தொகை கணக்கெடுப்பு ஐக்கிய அமெரிக்காவில் வசிக்கும் மக்கள் அனைவரையும் கணக்கில் சேர்த்துக்கொள்ளும். மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது உங்கள் குடும்பத்தைப் பற்றியும், அதில் வசிக்கும் நபர்களைப் பற்றியும் அடிப்படைத் தகவல்களைக் கேட்கின்ற ஒரு சிறு கேள்விப்பட்டியல் ஆகும். **உங்கள் தனிப்பட்ட பதில்கள் இரகசியமானவை மற்றும் அவை குடிவரவு அமலாக்கம், காவல்துறை அல்லது வீட்டுவசதி அதிகாரிகள் உள்ளிட்ட மற்ற அரசாங்க முகமைகளுடன் பகிரப்பட மாட்டாது.** அரசியல் பிரதிநிதித்துவத்தைப் பிரிப்பதற்கும், வளங்களை எங்கு செலவழிப்பது எனத் தீர்மானிப்பதற்கும் மக்கள் தொகை எண்ணிக்கையை அரசாங்கம் பயன்படுத்துகின்றது.

## மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு நான் எவ்வாறு பதிலளிக்க வேண்டும்?

மார்ச் 2020-இல், மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகம் மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு பதிலளிக்குமாறு குடும்பங்களுக்கு அஞ்சலில் அழைப்பு விடுக்கும். பங்கேற்பதற்கு மூன்று வழிகள் உள்ளன:

| | |
|---|---|
| **இணையம்** | முதல் முறையாக, உங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்புப் படிவத்தை நீங்கள் இணையத்தில் பூர்த்தி செய்ய முடியும். பெரும்பாலான குடும்பங்களுக்கு, தனிப்பட்ட குடும்ப அடையாளக் குறியீடு (ID) மற்றும் அதிகாரப்பூர்வ மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலக இணையதளத்தின் முகவரி ஆகிய விவரங்களுடன் ஒரு கடிதம் அனுப்பப்படும்.<br><br>*இணையதள சுய-பதிலளிப்பு படிவம் சீனம் (எளிமைப்படுத்தப்பட்டது), ஜப்பானிய, கொரிய, டாகலாக் மற்றும் வியட்நாமிய மொழிகள் உள்ளிட்ட 12 ஆங்கிலம் அல்லாத மொழிகளில் கிடைக்கின்றது.* |

| | |
|---|---|
| **தொலைபேசி** | கேள்விகள் கேட்பதற்கும், மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு தொலைபேசி வாயிலாக பதிலளிப்பதற்கும் மக்கள் தொகை கணக்கெடுப்பு கேள்வித்தாள் உதவித் தொலைபேசி எண்ணை நீங்கள் அழைக்கலாம்.<br><br>*தொலைபேசி வழி ஆதரவு ஆங்கிலம் மற்றும் சீனம் (மேண்டரின் மற்றும் காண்டோனீஸ்), ஜப்பானிய, கொரிய, டாகலாக் மற்றும் வியட்நாமிய மொழிகள் உள்ளிட்ட 12 ஆங்கிலம் அல்லாத மொழிகளிலும் அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மொழிக்கும் ஒரு பிரத்தியேக கட்டணமில்லாத மக்கள் தொகை கணக்கெடுப்பு தொலைபேசி எண் வாயிலாக அழைப்பாளர்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ளலாம், கேள்விகள் கேட்கலாம் மற்றும் தங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்புப் படிவத்துக்கு பதிலளிக்கலாம்.* |
| **காகிதம்** | காகிதப் படிவம் மூலம் நீங்கள் பதிலளிக்கலாம். சில வீடுகள் – சுமார் ஐந்தில் ஒன்று – முதல் அஞ்சல் பட்டியல் மூலம் ஒரு காகிதப் படிவத்தைப் பெறும். நான்காவது அஞ்சல் பட்டியலின் முடிவில் அனைவருக்கும் காகிதப் படிவம் கிடைத்துவிடும்.<br><br>*காகிதப் படிவம் ஆங்கில மற்றும் ஸ்பானிஷ் மொழிகளில் மட்டுமே கிடைக்கின்றது.* |

## மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு நான் எப்போது பதிலளிக்க வேண்டும்?

மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகம் மக்களை பதிலளிப்பதற்கு ஊக்குவிக்கும் விதமாக, பல முறை கடிதம் அனுப்பும்:

| | |
|---|---|
| மார்ச் 12-20 | மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகம் பதிலளிப்பதற்கான அழைப்பிதழ்களை மூன்று தனித்தனி கடிதங்களில் குடும்பங்களுக்கு அனுப்பும். |
| மார்ச் 16-24 | பதிலளிக்காத குடும்பங்களுக்கு நினைவூட்டுக் கடிதங்கள் அனுப்பப்படும். |
| மார்ச் 26-ஏப்ரல் 3 | பதிலளிக்காத குடும்பங்களுக்கு நினைவூட்டல் அஞ்சல் அட்டைகள் அனுப்பப்படும். |
| ஏப்ரல் 8-16 | பதிலளிக்காத குடும்பங்களுக்கு நினைவூட்டுக் கடிதங்களும் காகிதப் படிவங்களும் அனுப்பப்படும். |
| ஏப்ரல் 20-27 | இறுதி நினைவூட்டல் அஞ்சல் அட்டைகள் அனுப்பப்படும். |
| மே 13 | மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலக ஊழியர்கள் பதிலளிக்காத குடும்பங்களைப் பார்வையிடச் செல்லத் தொடங்குவார்கள். |

## 2020 மக்கள் தொகை கணக்கெடுப்பு என்னிடம் என்ன கேட்கும்?

2020 மக்கள் தொகை கணக்கெடுப்பை முடிப்பதற்கு சில நிமிடங்களே ஆகும் மற்றும் அதில் கீழே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகள் கேட்கப்படும்.

**2020 மக்கள் தொகை கணக்கெடுப்பில் உங்கள் குடும்பம் பற்றி கேட்கப்படும்.**

| | |
|---|---|
| ஏப்ரல் 1 ஆம் தேதியன்று உங்கள் முகவரியில் வசிக்கின்ற அல்லது தங்கியிருக்கின்ற நபர்களின் எண்ணிக்கை. | *உங்களுக்கு உறவினராக இல்லாதவர்கள் தங்கியிருந்தால், அவர்கள் உட்பட உங்கள் வீட்டில் உள்ள அனைவரையும் சேர்க்கவும். சிறு குழந்தைகள், குடிமக்கள் அல்லாதவர்கள், வாடகைதாரர்கள் என ஐக்கிய அமெரிக்காவில் உள்ள அனைத்து நபர்களும் மக்கள் தொகை கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.* |
| நீங்கள் சொந்த வீடு வைத்திருக்கிறீர்களா அல்லது வாடகை வீ ட்டில் இருக்கிறீர்களா? | *நீங்கள் சொந்த வீடு வைத்திருக்கிறீர்களா அல்லது வாடகை வீட்டில் இருக்கிறீர்களா என பதிலளிக்கவும்.* |
| தொலைபேசி எண் | *அதிகாரப்பூர்வ மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலக அலுவல்களுக்கு மட்டுமே மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகம் உங்கள் தொலைபேசி எண்ணைப் பயன்படுத்தும்.* |

**2020 மக்கள் தொகை கணக்கெடுப்பு உங்கள் குடும்பத்தில் வசிக்கும் ஒவ்வொரு நபரைப் பற்றியும் கேள்வி கேட்கும்.**

| | |
|---|---|
| பெயர், வயது, பிறந்த தேதி மற்றும் பாலினம் | *ஒவ்வொரு நபரின் பெயர், வயது மற்றும் பிறந்த தேதியை உள்ளிடவும். பாலினத்துக்கு, ஆண் மற்றும் பெண் என்ற தெரிவுகளை மட்டுமே மக்கள் தொகை* |

| | |
|---|---|
| | *கணக்கெடுப்பு செயலகம் அளிக்கிறது என்பதை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.* |
| படிவத்தைப் பூர்த்தி செய்யும் நபருடன் உள்ள உறவுமுறை | *நீங்கள் தேர்ந்தெடுப்பதற்கு உறவுகளின் பட்டியல் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது, அதில் உள்ளடங்குவன துணைவர் (அதே அல்லது மாற்றுப் பாலினத்தவர்), சகோதரன் அல்லது சகோதரி, பெற்றோர், அறைத் தோழர் அல்லது மற்றவர்.* |
| இனம் | *நீங்கள் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இனங்களைத் தேர்ந்தெடுக்கலாம். நீங்கள் பல இனம் சார்ந்தவராக அடையாளம் கண்டறியப்பட்டால், உங்கள் இனக் குழுக்களின் பெட்டியை அல்லது பெட்டிகளைக் குறியிட்டு, உங்கள் இனப் பின்னணி பற்றிய கூடுதல் விவரங்களை எழுதவும்.*<br>*அனைத்து இனக் குழுக்களும் விருப்பத்தெரிவுப் பெட்டிகள் கொண்டவையாக பட்டியலிடப்படவில்லை. உங்கள் இனக் குழு பட்டியலில் இல்லையென்றால், உங்கள் இனப் பின்னணி பற்றிய கூடுதல் விவரங்களை நீங்கள் எழுத முடியும்.* |
| ஹிஸ்பானிக் பிறப்பு | *இது நீங்கள் ஹிஸ்பானிக் அல்லது லத்தினோ இனத்தவரா என்பதைக் கேட்கிறது. இது ஒரு இனக்குழு எனக் கருதப்படுகிறது, இனம் அல்ல. இனப் பெட்டியுடன் சேர்த்து இதையும் குறிப்பிடவும்.* |

**2020 மக்கள் தொகை கணக்கெடுப்பு குடியுரிமை பற்றிக் கேட்பதில்லை.**

உங்கள் வீட்டில் ஆறு பேருக்கும் மேல் வசித்தால், ஏழு மற்றும் அதற்கு மேற்பட்ட நபர்களின் அடிப்படைத் தகவல்களை மட்டுமே நீங்கள் அளிக்க வேண்டும். பெயர், வயது, பிறந்த தேதி, பாலினம், இனம் மற்றும் அந்த நபர் படிவத்தைப் பூர்த்தி செய்யும் நபருக்கு உறவினரா என்பன அடிப்படைத் தகவல்கள் ஆகும்.

## 2020 மக்கள் தொகை கணக்கெடுப்பு என்னிடம் எதைக் கேட்காது?

**மக்கள் தொகை கணக்கெடுப்பு படிவம் உங்கள் குடியேற்றம் அல்லது குடியுரிமை நிலை பற்றி கேட்காது. உங்கள் சமூகப் பாதுகாப்பு எண்ணையும் கேட்காது.**

## நான் அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டுமா?

மத்திய அரசின் சட்டப்படி மக்கள் தொகை கணக்கெடுப்பில் அனைவரும் பங்கேற்க வேண்டும் மற்றும் அனைத்துக் கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டும். பதிலளிப்பவர்கள் தங்கள் பெயர் மற்றும் முகவரியைத் தெரிவித்திருந்து, ஒன்றிரண்டு கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் தவிர்த்திருந்தால், அவர்களும் கணக்கில் சேர்க்கப்படுவார்கள். நீங்கள் பல கேள்விகளைத் தவிர்த்திருந்தாலோ அல்லது எந்தக் கேள்விக்கும் பதிலளிக்கா விட்டாலோ, விடுபட்ட தகவல்களைப் பெறுவதற்காக ஒரு மக்கள் தொகை கணக்கெடுப்பு ஊழியர் உங்கள் வீட்டிற்கு வருவார். அனைத்துக் கேள்விகளுக்கும் உண்மையாகப் பதிலளிக்கவும.; மக்கள் தொகை கணக்கெடுப்புக் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போது பொய் சொல்ல வேண்டாம்.

## என் பதில்கள் இரகசியமாக வைக்கப்படுமா? 2020 மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு பதிலளிப்பதால் எனக்கு தீங்கு நேரிடுமா?

- இரகசியத்தன்மை: மக்கள் தொகை கணக்கெடுப்பு தகவல்கள் அனைத்தும் இரகசியமானவை. சட்டப்படி, மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகம் தனிப்பட்ட நபர்களின் தகவல்களை குடிவரவு அதிகாரிகள், மற்ற அரசாங்க முகமைகள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட யாருடனும் பகிர்ந்துக்கொள்ள முடியாது. மத்திய அரசு சட்டம் மக்கள் தொகை கணக்கெடுப்புத் தரவுகளுக்கு மிகவும் வலுவான இரகசியத்தன்மை பாதுகாப்புகளைக் கொண்டுள்ளது மற்றும் அது உங்கள் தகவல்களைப் பாதுகாக்கிறது.
- அபராதங்கள்: உங்கள் தரவுகளுக்களைக் கையாளும் வாய்ப்புள்ள ஒவ்வொரு மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலக ஊழியரும் உங்கள் தகவல்களைப் பாதுகாப்பதாக உறுதிமொழி செய்துள்ளனர். ஒரு மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலக ஊழியர் இந்தச் சட்டத்தை மீறினால், அது ஒரு கூட்டாட்சி குற்றம் ஆகும். அபராதங்கள் கடுமையாக இருக்கும். ஐந்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை, $250,000 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.
- தரவுப் பாதுகாப்பு: கூடுதலாக, மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகத்தால் சேகரிக்கப்படும் பதில்களைப் புள்ளிவிவரத் தரவுகளுக்காக மட்டுமே பயன்படுத்த முடியும். மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகம் ஒட்டுமொத்தப் புள்ளிவிவரங்களை மட்டுமே வெளியிடுகிறது, தனிநபரையோ, வணிகத்தையோ அல்லது நிறுவனத்தையோ அடையாளம் கண்டுணரக்கூடிய தகவல்களை அது வெளியிடாது. மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு பதிலளித்த தனி நபருக்கு தீங்கு ஏற்படும் வகையில் மக்கள் தொகை கணக்கெடுப்புச் செயலகத்தால் தயாரிக்கப்பட்ட புள்ளிவிவரத் தரவுத் தொகுப்புகளைப் பயன்படுத்துவதற்கு, மத்திய, மாநில மற்றும் உள்ளூர் அரசாங்க முகமைகள் தடை செய்யப்பட்டுள்ளன.

## 2020 மக்கள் தொகை கணக்கெடுப்பை முடிப்பதற்கு எனக்கு மொழி உதவி தேவைப்படுகின்றதா?

**இணையம்:** இணையதள சுய-பதிலளிப்பு படிவம் சீனம் (எளிமைப்படுத்தப்பட்டது), ஜப்பானிய, கொரிய, டாகலாக் மற்றும் வியட்நாமிய மொழிகள் உள்ளிட்ட 12 ஆங்கிலம் அல்லாத மொழிகளில் கிடைக்கின்றது.

**தொலைபேசி:** தொலைபேசி வழி ஆதரவு ஆங்கிலம் மற்றும் சீனம் (மேண்டரின் மற்றும் காண்டோனீஸ்), ஜப்பானிய, கொரிய, டகாலாக் மற்றும் வியட்நாமிய மொழிகள் உள்ளிட்ட 12 ஆங்கிலம் அல்லாத மொழிகளிலும் அளிக்கப்படுகின்றது.. ஒவ்வொரு மொழிக்கும் ஒரு தனித்துவமான கட்டணமில்லாத மக்கள் தொகை கணக்கெடுப்பு தொலைபேசி எண் வாயிலாக, அழைப்பாளர்கள் மக்கள் தொகை கணக்கெடுப்பு பற்றிய கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ளலாம், கேள்விகள் கேட்கலாம் மற்றும் தங்கள் மக்கள் தொகை கணக்கெடுப்புப் படிவத்திற்கு பதிலளிக்கலாம்.

**காகிதம்:** காகிதப் படிவம் ஆங்கிலம் மற்றும் ஸ்பானிஷ் மொழிகளில் கிடைக்கின்றது.

.

**மொழி உதவி வளங்கள்:** மக்கள் தொகை கணக்கெடுப்பு செயலகம் மொழி அருஞ்சொல் அகராதி, மொழி அடையாள அட்டைகள் மற்றும் மொழிக் கையேடுகளை ஆங்கிலம் அல்லாத 59 மொழிகளில் தயாரித்துள்ளது. இது www.2020census.gov-இல் இடம்பெறச் செய்யப்படும்.

*சமூக உறுப்பினர்கள் மற்றும் சமூகம் சார்ந்த நிறுவனங்களுக்கான விவரக்குறிப்புகள் உட்பட, மக்கள் தொகை கணக்கெடுப்பு பற்றிய கூடுதல் தகவல்களைக் காண, www.countusin2020.org/resources-ஐப் பார்வையிடுங்கள்.*